# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093669

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 6/2020/AC/TPR | Date: நாள் 12.11.2020

2. (i) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: P.C (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 11.11.2020 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.45hrs | Time to : நேரம் வரை 12.11.2020 00.45hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.11.2020 | Time : நேரம் 15.15hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol III | Time : நேரம் 15.15hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக டைப் செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 15 km வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், சேவூர் ரோடு, அவிநாசி, திருப்பூர் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ஜெபத்துரை | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சாமிநாதன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/5/1966 | (d) Nationality : நாட்டினம் இந்தி | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் கோவை மாவட்ட நில அளவைக்கு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tmt. G. சாந்தி, வட்டாட்சியர், அவிநாசி தாலுகா, திருப்பூர் மாவட்டம்
2. Tr. K. நடராஜன், கிராம உதவியாளர், பழங்கரை கிராமம் (3) Tr. A. செல்வராஜ், இளநிலை வருவாய் ஆய்வாளர், ஏழை பட்டா திட்டப்பிரிவு (4) Tmt. ஸ்ரீ காந்திமதி இளநிலை வருவாய் ஆய்வாளர், ஏழை பட்டா திட்டப்பிரிவு (5) Tr. S. மாரியப்பன் அட்டெண்டர், வட்டாட்சியர் அலுவலகம், அவிநாசி (6) Tr. கோபிநாத், S/o. பாலசுப்பு, D. No. 120, செங்கப்பள்ளி 7வது வீதி, 15 வேலம்பாளையம் திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible] 12.11.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[illegible] 12/11/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.11.2020 – 16.45 hrs

Name: பெயர் ...R. [illegible]...
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
[illegible] மற்றும் [illegible]
திருப்பூர்.

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 6/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 12.11.2020-ம் தேதி மதியம் 15.15 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.இரத்தினம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.S.இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.597/2020/ஜ1 நாள்.12.11.2020 ஐயா, பொருள்: திடீர் தணிக்கை - வட்டாட்சியர் அலுவலகம், அவிநாசி, திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக. நேற்று 11.11.2020-ம் தேதி காலை திருப்பூர் மாவட்டம், அவிநாசி, சேவூர் ரோட்டில் உள்ள அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோர்கள் சகிதம் மேற்படி அலுவலகத்தை 11.11.2020-ம் தேதி மாலை சுமார் 17.45 மணி முதல் 12.11.2020-ம் தேதி அதிகாலை சுமார் 00.45 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின்போது வட்டாட்சியர் திருமதி.G.சாந்தி, பழங்கரை கிராம உதவியாளர் திரு.நடராஜன், சமூக பாதுகாப்பு திட்ட பிரிவு, முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.ஸ்ரீநந்தினி, சமூக பாதுகாப்பு திட்ட பிரிவு, இள நிலை வருவாய் ஆய்வாளர் திரு.ஈஸ்வரமூர்த்தி, தனிநபர் திரு. ஜோசப்ராஜா ஆகியோர்களிடமிருந்தும், வட்டாட்சியரின் வாகன எண்.TN39 G 0149–ல் இருந்தும் கணக்கில் வராத மொத்தப்பணம் ரூ.60,510/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி. J.ஜெனிட்டா அவர்களிடமிருந்து இவ்வலுவலக பதிவேடுகளின் ஒப்பம் பெற்ற

ஜெராக்ஸ் நகல்கள் பெறப்பட்டது. மேலும் தலைமை இடத்து துணை வட்டாட்சியர் திரு.தமிழேஸ்வரன் அவர்களிடமிருந்து கொரோனா மாற்றுத்திறனாளி உதவி தொகை வழங்கபட்ட விபர பதிவேடு 2020 மற்றும் கணினி மூலம் தட்டச்சு செய்யபட்ட மேற்படி நிவாரண தொகை வழங்கபட்ட விபரம், மக்கள் தொகை பதிவேடு NPR மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவை பெறப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,510/- அசல் பதிவேடு மற்றும் பதிவேடுகளின் ஒப்பம் பெற்ற ஜெராக்ஸ் நகல்கள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் XXXX S.இரத்தினம் 12.11.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு மேற்கண்டுள்ளவாறு. Sir, received the complaint with enclosures on 12.11.2020 at 15.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.6/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx R.கௌசல்யா 12/11/2020 Inspector of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.1) S. இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,கோயம்புத்தூர் மாவட்டம். 2) திருமதி. R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 11.11.2020 ஆம் தேதி காலை திருப்பூர் மாவட்டம், அவிநாசி, சேவூர் ரோட்டில் உள்ள அவிநாசி வட்டாச்சியர் அலுவலகத்தில் வட்டாச்சியர் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களிடம் கையூட்டாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S. இரத்தினம் ஆகிய நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை இன்று 11.11.2020 ஆம் தேதி சுமார் 17.45 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் விவரம் பின்வருமாறு:- திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர் மாவட்டம், அவிநாசி, சேவூர் ரோட்டில் கிழக்கு பக்கம் உள்ள வடக்கு

பார்த்த அவிநாசி வட்டாச்சியர் அலுவலகத்திற்குள் மாலை சுமார் 17.45 மணிக்கு நுழைந்தபோது அலுவலகத்தின் வலதுபக்க அறையில் வடக்கு பார்த்தவாறு வட்டாச்சியர் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.G.சாந்தி என்பவரிடம் விசாரிக்க இவ்வலுவலகத்தில் கடந்த 21.08.2019 ஆம் தேதி முதல் வட்டாச்சியராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவர் அமர்ந்திருந்த இருக்கையில் முன்னுள்ள மேசையின் வலதுபுறத்தில் உள்ள டைரியை தணிக்கை செய்ய அதில் பணம் ரூ.70/- இருந்தது. இது குறித்து அவரிடம் விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி வட்டாச்சியர் அமர்ந்திருந்த அறையின் பின்புறத்தில் உள்ள ஓய்வு அறையை தணிக்கை செய்தபோது வடக்கு பார்த்திருந்த மேசையின் வலதுபுற டிராயரில் பணம் ரூ.10,000/- இருந்தது. இதுகுறித்து வட்டாச்சியர் திருமதி. G.சாந்தி அவரிடம் விசாரித்தபோது முன்னுக்குபின் முரணாக பதிலளித்தார். மேற்படி பணம் ரூ.10,000/- பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.10,000/-விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வட்டாச்சியரின் அறைக்கு கிழக்கே கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த தலைமையிடத்து துணை வட்டாச்சியர் திரு.C.தமிழேஷ்வரன் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.500/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து அவரிடம் விசாரித்தபோது அது தனது சொந்த என்று கூறியதால், அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு வலதுபுறம் கிழக்கு பார்த்தாற்போல் உள்ள இரும்பு பீரோவை தணிக்கை செய்தபோது அதில் இரண்டாவது அடுக்கில் உள்ள லாக்கரில் பணம் 500 ரூபாய் கட்டாக ரூபாய் 1,77,000/- இருந்தது. இதுகுறித்து அவரிடம் விசாரிக்க அது கொரோனா மாற்றுத்திறனாளி உதவித்தொகை என கூறினார். மேலும் மேற்படி லாக்கரில் கட்டை பையில் பணம் ரூ.1,17,000/- இருந்தது. ஆக மொத்தம் ரூ.2,94,000/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்தான பதிவேடுகளை கேட்க அவர் தன்வசமிருந்த பதிவேடான கொரோனா

மாற்றுத்திறனாளி உதவித்தொகை வழங்கப்பட்ட விவரப்பதிவேடு 2020 மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு NPR ஆவணங்களை பார்வையிட்டதில் கொரோனா மாற்றுத்திறனாளி உதவித்தொகை வழங்கப்பட்ட விவரப்பதிவேட்டில் அதில் கையிருப்பு தொகை ரூ.1,83,000/- என காட்டப்பட்டுள்ளது. மீதி பணம் ரூ.6000/- குறைவாக உள்ளது. மேலும் மக்கள் தொகை கணக்கீட்டாளர்களுக்கு மதிப்பூதியம் அரசாங்கத்தால் கடந்த 07.08.2019 ஆம் தேதியன்று ரூ.6,76,500/- வழங்கியதாகவும், அதில் கணக்கீட்டாளர்களுக்கு மதிப்பூதியம் ரூ.5,61,000/- வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதி கணக்கீட்டாளர்களுக்கு வழங்கபடவேண்டிய தொகை ரூ.1,15,500/- கையிருப்பில் உள்ளதாகவும் கூறினார். இதுகுறித்து ஆவணங்களை கோர அவிநாசி வட்டாச்சியர் பெயரில் அவிநாசி ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வங்கி கணக்கு எண்.10920670907 என்கிற வங்கி கணக்கு புத்தகத்தை ஆஜர் செய்ததில் 07.08.2019 ஆம் தேதியன்று மேற்படி வங்கி கணக்கில் ரூ.6,76,500/- வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் தொகை பதிவேடு NPR ஆவணத்தை பார்வையிட்டதில் ரூ.5,61,000/- பட்டுவாடா செய்யப்பட்டும் ரூ.1,15,500/- பட்டுவாடா செய்யவேண்டியதாக இருந்தது. மேற்படி மக்கள் தொகை மேற்படி மக்கள் தொகை கணக்கீடு மதிப்பூதியமும் கொரோனா மாற்றுத்திறனாளி உதவித்தொகையும் சேர்த்து இருக்கவேண்டிய தொகை ரூ.2,98,500/- ஆகும். ஆனால் கையிருப்பில் உள்ள தொகை ரூ.2,94,000/- மட்டுமே ஆகும். பற்றாக்குறை தொகை ரூ.4500/- ஆகும். மேற்படி பற்றாக்குறை தொகை ரூ.4500/- பற்றி மேற்படி தலைமையிடத்து வட்டச்சியார் திரு. C.தமிழேஸ்வரன் அவர்களை விசாரிக்க அவர் யாரேனும் கிராம நிர்வாக அலுவலருக்கு கொடுத்ததை மறதியில் பதிவேட்டில் காட்டாமல் விட்டிருப்பேன் என கூறினார். மேற்படி அரசுத்தொகை ரூ.2,94,000/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் தலைமையிடத்து துணை வட்டாச்சியர் திரு.C.தமிழேஸ்வரன் என்பவரின் எதிரே மேற்கு பார்த்து அமர்ந்திருந்த அவிநாசி தனி வட்டாச்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்)

என்பவரை விசாரிக்க அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.410/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. அவரது இருக்கையை சுற்றி அமர்ந்திருந்த வட்ட சார் ஆய்வாளர் திருமதி. D.தீபா என்பவரை விசாரிக்க அவர் தனது கையில் வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.320/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி தீபாவை ஒட்டி அமர்ந்திருந்த வட்ட ஆவண வரைவாளர் சுதாமணி என்பவரை விசாரிக்க அவர் தனது கையில் வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. அவர் அருகே அமர்ந்திருந்த முதுநிலை வரைவாளர் R.கஸ்தூரி என்பவரை விசாரிக்க அவர் தனது கையில் வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நபர் அருகே நில அளவை பிரிவு சார் ஆய்வாளர் திரு. K.சதாசிவம் என்பவரை விசாரிக்க அவர் தனது பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.280/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி A3 முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.குமரேசன் இருக்கைக்கு எதிரே தெற்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த A4 முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.J.ஜெனிட்டா என்பவரை விசாரிக்க அவர் தனது இருக்கையின் அருகே வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ. 490/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி முதுநிலை வருவாய் ஆய்வாளர்

திரு.G.பூபதி என்பவரை விசாரிக்க அவர் மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா உதவித்தொகை வழங்கியதற்கான ஒப்புகை கடிதம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிய தகவலை தலைமையிடத்து துணை வட்டாச்சியரிடம் தெரிவிக்க வந்ததாக கூறினார். அவரை விசாரித்தபோது தானாகவே முன்வந்து தனது சட்டையின் இடதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1060/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி அறைக்கு கிழக்கே ஹாலில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.R.அனிதா என்பவரை விசாரிக்க அவர் தனது இருக்கையின் அருகே வைத்திருந்த கைபையிலிருந்து பணம் ரூ.150/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. அவர் அருகே அமர்ந்திருந்த காளிபாளையம் கிராம உதவியாளர் திருமதி.M.சத்தியபிரியா என்பவரை விசாரிக்க அவர் தனது சுடிதாரின் வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.37/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சத்தியபிரியா அருகே அமர்ந்திருந்த தட்டச்சர் அம்சவேணி என்பவரை விசாரிக்க அவர் தனது கைபையிலிருந்து பணம் ரூ.80/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி திருமதி.அனிதா அவர்களுக்கு அருகே நின்றிருந்த வட்டாச்சியரின் வாகன ஓட்டுனர் திரு. மாரியப்பன் என்பவரை விசாரிக்க அவர் தனது சட்டையின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.520/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. அதையடுத்து வடக்கு பார்த்து அமர்திருந்த A3 இருக்கை முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.P.குமரேசன்

இருக்கைக்கு மேற்புறத்தில் தெற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த B3 இளநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி G.பிரியங்கா என்பவரை விசாரிக்க அவர் தனது இருக்கையின் அருகே வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.120/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. அவர் அருகே இருந்த சமூக பாதுகாப்பு திட்ட இளநிலை உதவியாளர் திருமதி. சரஸ்வதி அவர்களை விசாரிக்க அவர் தனது கையில் வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.180/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி ஹாலுக்குள் நுழைந்த பழங்கரை கிராம உதவியாளர் திரு.நடராஜன் என்பவரை விசாரிக்க அவர் தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.15,000/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார். மேற்படி பணம் ரூ.15,000/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வட்டாச்சியர் அலுவலகத்திற்கு தென்புறத்தில் வடக்கு பார்த்து அமைந்திருந்த சமூக பாதுகாப்பு திட்ட பிரிவினுள் நுழைந்தபோது கிழக்கு பார்த்து தனது அமர்ந்திருந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.G.ஸ்ரீநந்தினி என்பவரை விசாரிக்க அவர் தனது இருக்கையின் அருகே வைத்திருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.2,200/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார். மேற்படி பணம் ரூ.2,200/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி ஸ்ரீநந்தினி இருக்கைக்கு அருகே வடக்கு பார்த்து அமர்ந்திருந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.ஈஸ்வரமூர்த்தி என்பவரை விசாரிக்க அவர் தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,420/- எடுத்து

ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார். மேற்படி பணம் ரூ.4,420/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி ஈஸ்வரமூர்த்தி அருகே மேற்கு பார்த்தவாறு கணினி முன்பு அமர்ந்திருந்த தற்காலிக பணியாளர் திருமதி. கற்பகம் என்பவரை விசாரிக்க அவர் தான் சமூக பாதுகாப்பு திட்ட பிரிவில் இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு உதவியாக தற்காலிக பணியாளராக கடந்த 2017 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு மாத சம்பளமாக ரூ.4000/- மேற்படி திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் கொடுத்து வருவதாக கூறினார். மேற்படி கற்பகம் அவரிடம் விசாரித்தபோது அவர் தான் இருக்கையின் அருகே இருந்த தனது கைப்பையினுள் இருந்து பணம் ரூ.40/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் திரும்ப அவரிடமே

ஒப்படைக்கபட்டது மேற்படி அறையின் மேற்கு பார்த்தவாறு இருந்த வட்ட வழங்கல் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது கணினி விவர பதிவாளர் திரு G ஸ்ரீதர் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார் மேற்படி சமூக பாதுகாப்பு திட்ட பிரிவுக்கு வலதுபுறம் கிழக்கு பார்த்திருந்த தேர்தல் பிரிவிற்குள் நுழைந்தபோது கிழக்கு பார்த்து இருக்கையில் அமர்ந்திருந்த தற்காலிக இளநிலை உதவியாளர் திருமதி P லோகேஸ்வரி என்பவரை விசாரிக்க அவர் தனது டேபிலின் மேலிருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ 250/- எடுத்து ஆஜர் செய்தார் இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கபட்டது மேற்படி அறைக்கு உள்ளே வடக்கு பார்த்த அறையினுள் நுழைந்தபோது வடக்கு பார்த்து அமர்ந்திருந்த தனி துணை வட்டாச்சியர் தேர்தல் திருமதி M பபிதா என்பவரை விசாரிக்க அவர் தனது டேபிலின் மேலிருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ 440/- எடுத்து ஆஜர் செய்தார் இது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் திரும்ப

அவரிடமே ஒப்படைக்கபட்டது. வட்டாச்சியர் அலுவலகத்தின் காத்திருப்போர் அறையில் நுழைந்தபோது அங்கிருந்த திருப்பூர் 15-வேலம்பாளையம், சொர்ணபுரி அவன்யு 7 ஆவது விதி கதவு எண்.120 சேர்ந்த மாரிமுத்து மகன் ஜோசப்ராஜா என்பவரை விசாரிக்க அவர் தான் அவிநாசி வட்டாச்சியர் திருமதி.சாந்தி அவர்களை பார்க்க வந்ததாகவும், தான் ரியல் எஸ்டேட் புரோக்கராகவும் இருந்து வருவதாகவும் உரிமை சான்றின் உண்மை தன்மை சான்று பெற வந்ததாகவும் கூறினார். பிறகு அவரை விசாரிக்க அவராகவே தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.8,890/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார். மேற்படி பணம் வட்டாச்சியருக்கு கையூட்டாக கொடுக்க வந்த பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி காத்திருப்போர் அறையின் சந்தில் மேற்புறத்தில் கிழக்கு பார்த்தவாறு இருந்த அரசு இ-சேவை மையத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த கணினி ஆபரேட்டர் திரு.சித்திக் என்பவரை விசாரிக்க அவர் தனது சட்டையின் இடது புற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1400/- எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறினார். அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி நபர் அருகே கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த கணினி ஆபரேட்டர் திருமதி.அகிலாண்டேஸ்வரி என்பவரை விசாரிக்க அவர் தனது இருக்கையின் அருகே இருந்த கைபையினுள் இருந்த பணம் ரூ.3340/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேற்படி வட்டாச்சியர் அலுவலக வளாகத்திற்குள் தெற்கு பார்த்து நிறுத்தியிருந்த வட்டாச்சியர் திருமதி.G.சாந்தி அவர்களின் அரக வாகனமான மஹிந்த்ரா பொலிரோ TN 39 G 0149 என்ற வாகனத்தை தணிக்கை செய்தபோது மேற்படி வாகனத்தில் வட்டாசியர் அமரும் இருக்கைக்கு பின்புறம் பணம் ரூ.20,000/- இருந்தது. இதுகுறித்து வட்டாச்சியர் திருமதி. G.சாந்தி அவர்களிடம் வாகன ஓட்டுனர்

திரு.மாரியப்பனிடமும் விசாரித்தபோது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேற்படி பணம் ரூ.20,000/- பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. இவ்வலுவலக பதிவேடுகளை பற்றி கேட்க முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.J.ஜெனிட்டா அவர்கள் தான் பராமரிக்கும் 1) அவிநாசி வட்டாச்சியர் அலுவலக வருகை பதிவேடு, 2) தற்காலிக பணியாளர்கள் வருகை பதிவேடு 3) வருகை பதிவேட்டின் தொடர் பதிவேடு 4) மாற்று பணி பணியாளர்கள் வருகை பதிவேடு 5) பட்டா மாறுதல் நத்தம் பதிவேடு ஆகியவற்றை ஆஜர் செய்ததை நவம்பர்-2020 மாதத்திற்குரிய வருகை பதிவேட்டின் நகல்களையும், 11.11.2020 ஆம் தேதிக்குரிய வருகை பதிவேட்டின் தொடர் பதிவேட்டின் நகலையும், பட்டா மாறுதல் நத்தம் பதிவேட்டின் கடைசி 2 பக்கங்களின் நகல்களையும் திருமதி. J.ஜெனிட்டா அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேற்படி தலைமையிடத்து துணை வட்டாச்சியர் திரு.தமிழேஸ்வரன் அவர்கள் அவர்வாசம் உள்ள கொரோனா மாற்றுதிறனாளி உதவித்தொகை வழங்கபட்ட விவரப்பதிவேடு 2020 மற்றும் கணினி மூலம் தட்டச்சு செய்யபட்ட மேற்படி நிவாரண தொகை வழங்கப்பட்ட விவரம் மற்றும் மக்கள் தொகை பதிவேடு NPR ஆகியவற்றை ஆஜர் செய்தார். விசாரணையின் பொருட்டு மேற்படி ஆவணங்கள் கைபற்றப்பட்டது. மேலும் அவிநாசி வட்டாச்சியர் பெயரில் அவிநாசி ஸ்டேட் பாங்க் ஆ:ப் இந்தியா வங்கி கணக்கு எண்.10920670907 என்கிற வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் 07.08.2019 ஆம் தேதி ரூ. 6,76,500/- வரவு வைக்கப்பட்டதற்கான பக்கத்தின் நகல் எடுத்து தலைமையிடத்து துணை வட்டச்சியரிடம் கையொப்பம் பெறப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.60,510/- விசாரணையின் பொருட்டு கைப்பற்றபட்டது. மேலும் கொடிநாள் வசூல் குறித்து தலைமையிடத்து துணை

வட்டாச்சியரிடம் விசாரித்தபோது அவர் இவ்வலுவலகத்தில் கொடி நாள் வசூல் ஏதுமில்லை என்று கூறினார். மேலும் ரொக்கபதிவேடு ஏதும் இவ்வலுவலகத்தில் பராமரிப்பதில்லை என கூறினார். இந்த திடீர் தணிக்கையானது 11.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.45 மணிக்கு துவங்கி 12.11.2020 ஆம் தேதி 00.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமை காவலர் 1799, திரு.அசோகன் என்பவரால் தட்டச்சு செய்யபட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களையும் மற்ற நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். பெண் அலுவலர்கள் காவல் ஆய்வாளரால் தணிக்கை செய்யபட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx கோ.சாந்தி, வட்டாட்சியர், அவிநாசி, எஸ்.இரத்தினம், துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், K.நடராஜன், கிராம உதவியாளர், பழங்கரை கிராமம், A.ஈஸ்வரமூர்த்தி, இளநிலை வருவாய் ஆய்வாளர், கு.ஸ்ரீநந்தினி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஜோசப்ராஜா, S.மாரியப்பன், ஓட்டுனர், வட்டாச்சியர் அலுவலகம், அவிநாசி, திருமதி.R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,510/-ஐயும், இன்று 12.11.2020-ம் தேதி 15.15 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.6/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் இன்று 15.30 மணிமுதல் 16.30 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, பணம் ரூ.60,510/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. [signature] 12/11/2020